DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC. No.150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 10 |
| Name | : | **திரு. முபாரக் ஹீ சைன்** |
| Father's Name | : | **அக்பர் ஹீ சைன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | **தாசில்தார்** |
| Age | : | |

**(வழக்கின் 1 மற்றும் 3 வது எதிரிகள் ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.09.2025

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் விநியோக அலுவகத்தில் பறக்கும் படை தனி வட்டாச்சியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் காளையார்கோவில் தாலுகா அலுவலகத்தில் வட்டாச்சியராக வேலை பார்த்து வந்தேன். சாட்சி மார்சல் என்பவரை எனக்கு தெரியும். அவர் காளையார்கோவில் தாலுகா சோமநாதமங்களம் குரூப்பில் கிராம நிர்வாக அலுவலராக அப்போது பணியாற்றி வந்தார். வழக்கின் ஆஜர் எதிரிகளான 1 ம் எதிரி தினேஷ்குமார் மற்றும் 3 ம் எதிரி குமாரை எனக்கு தெரியும்.

2. கடந்த 26.02.2024ம் தேதி நான் காளையார்கோவில் தாலுகா அலுவலகத்தில் வட்டாட்சியராக பணியில் இருந்தபோது காலை 12.45 மணிக்கு தொலைபேசி மூலம் காளையார்கோவில் காவல்நிலைய ஆய்வாளர் என்னை சாட்சி வாக்குமூலம் பதிவு செய்யவிருப்பதாகவும் அதற்காக காவல்நிலையம் வரும்படி என்னை அழைத்தார். நான் உடனே சோமநாதமங்களம் கிராம நிர்வாக அலுவலர் திரு. மார்சல் என்பவரையும் அழைத்துக்கொண்டு மதியம் 01.00 மணியளவில் காளையார்கோவில் காவல்நிலையத்திற்கு சென்றோம். காளையார்கோவில் காவல்நிலையத்தில் 1ம் எதிரி தினேஷ்குமார் என்பவர் அங்கு இருந்தார். காவல் ஆய்வாளர் 1ம் எதிரி தினேஷ்குமார் என்பவரை விசாரிக்க ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

3. அவ்வாறு வாக்குமூலம் கொடுக்கும்போது 1ம் எதிரி பல வழக்குகளில் சம்மந்தப்பட்டதாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் திருடப்பட்ட பொருட்கள் எல்லாம் எங்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்தார். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தபிறகு என்னிடமும் கிராம நிர்வாக அலுவலர் மார்சல் என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். அதன்பிறகு நாங்கள் அனைவரும் கல்லுவழி கிராமத்திற்கு சென்றோம். கல்லுவழியில் உள்ள சம்பவம் நடந்த வீட்டிற்கு போனோம். 1வது எதிரி தினேஷ்குமார் திருடப்பட்ட பொருட்கள் எங்கிருந்து எடுத்தார் என்பதை செய்து காண்பித்தார்.

4. அதன்பிறகு கண்ணங்கோட்டையில் உள்ள 1வது எதிரி தினேஷ்குமாரின் மாமனார் வீட்டிற்கு மதியம் 3.00 மணியளவில் சென்றோம். அங்கு இரண்டு இருசக்கரவாகனம், ஒரு ஸ்கூட்டி அங்கு நிறுத்தியிருந்ததை 1ம் எதிரி எடுத்து போலிசாரிடம் கொடுத்தார். அதன்பிறகு வீட்டிற்குள் சென்று மறைத்து வைத்திருந்த தங்க நகைகளை அடையாளம் காண்பித்து எடுத்து போலிசாரிடம் கொடுத்தார். ஒரு பெரிய தங்க செயின் மற்றும் 2 சிறிய தங்க செயின், 3 பவுன் எடையுள்ள தோடு, ஜிமிக்கி ஒரு ஜோடி, 1 ஜோடி வளையல் , உருக்கிய நிலையில் உள்ள தங்க கட்டி - 1, LED டிவி - 1, Sony LED டிவி -1, வாசிங் மிசின், ஏசி (அரை டன்)

ஆகிய பொருட்களை போலிசாரிடம் 1வது தினேஷ்குமார் ஒப்படைத்தார்.

5. போலிசார் அதற்காக மகஜர் தயார் செய்து எங்களிடம் கையொப்பம் வாங்கிகொண்டார்கள். அதன் பிறகு தெண்ணீர்வயல் என்ற இடத்திற்கு மாலை 6.00 மணியளவில் நாங்கள் அனைவரும் சென்றோம். அங்கு ஒரு ஊரணியில் இருந்து கடப்பாரை ஒன்றை மறைத்து வைத்திருந்ததை 1வது எதிரி தினேஷ்குமார் போலிசாரிடம் ஒப்படைத்தார். போலிசார் அதற்காக மகஜர் தயார் செய்து எங்களிடம் கையொப்பம் வாங்கிகொண்டார்கள்.

6. அதன்பிறகு 27.02.2024 ம் தேதி காலை 9.30 மணியளவில் 3 வது எதிரி குமார் என்பவர் வழக்கு குற்றச்சம்பவத்திற்கு உடந்தையாக இருந்ததாக கூறி ஒப்புதல் வாக்குமூலம் போலிசாரின் முன்னிலையில் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் கிராம நிர்வாக அலுவலர் மார்சல் என்பவரும் கையொப்பம் செய்தோம். 1ம் எதிரி தினேஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **முதல் கையொப்பம் அ.த.சா.ஆ.3** ஆகும். 3 வது எதிரி குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **முதல் கையொப்பம் அ.த.சா.ஆ.4** ஆகும்.

7. அதேபோல 1ம் எதிரியின் மாமனார் வீட்டில் வைத்து தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.5** ஆகும். அதேபோல் தெண்ணீர்வயல் என்ற இடத்தில் போலிசார் தயாரித்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.6** ஆகும். எங்களிடம் போலிசார் கையொப்பம் வாங்கிய பிறகு நாங்கள் அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் 26.02.2024ம் தேதி காளையார்கோவில் வட்ட நிர்வாக நடுவராக இருந்தேன் என்றால் சரிதான். அதனால் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும் நடைமுறைகள் தெரியும் என்றால் சரிதான். எதிரி அச்சமில்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்பதற்கான தேர்வை நான் செய்தேனா என்றால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை. 1வது எதிரி எங்கு இருந்தார் என்றால் ஆய்வாளரின் அறையில் இருந்தார். அப்போது ஆய்வாளருடன் எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் 2 போலிசார் இருந்தார்கள்.

2. யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் ஒரு போலிஸ்காரர் தட்டச்சு செய்தார். நான் அலுவலகத்தை விட்டு 8 கி.மீ தாண்டி வெளியே சென்றால் மாவட்ட ஆட்சியரிடம் முன் அனுமதி பெற்றுதான் செல்லவேண்டும் என்று வருவாய் துறை நிலையாணை உள்ளது என்றால் சரிதான். கண்ணங்கோட்டை கிராமத்திற்கு செல்வதற்கு மாவட்ட ஆட்சியரிடம் முன் அனுமதி பெற்றேனா என்றால் கோட்டாச்சியரிடம் தொலைபேசி மூலம் அனுமதி பெற்றுச்சென்றேன். அவ்வாறு நான் முன் அனுமதி பெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. கண்ணங்கோட்டையில் உள்ள 1வது எதிரியின் மாமனார் வீட்டு முகவரி என்ன என்றால் தெரியாது, 1வது எதிரி தினேஷ்குமார் தான் அழைத்து சென்றார். நான் நிர்வாக நடுவராக இருப்பதால் முகவரியை தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றால் சரிதான். 1வது எதிரியின் மாமனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததாக சொல்லும் வீட்டில் எத்தனை பேர் குடியிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததாக சொல்லும் வீட்டின் பரப்பளவு சுமார் எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. கண்ணங் கோட்டைக்கு யார் வண்டியில் சென்றோம் என்றால் எனது அலுவலக வண்டியில் தான் சென்றேன். எனது அலுவலக

வண்டியை எனது டிரைவர் தான் ஓட்டிவந்தார் என்றால் சரிதான். அந்த வண்டியில் எத்தனை பேர் சென்றோம் என்றால் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சென்றோம். எங்களது வண்டிக்கு ஆய்வாளர் வண்டிதான் வழி காண்பித்து சென்றது என்றால் சரிதான்.

5. கைப்பற்றியதாக சொல்லும் பொருட்கள் அனைத்தும் வீட்டில் இணைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். இணைக்கப்பட்டிருந்த ஏசியை யார் கழற்றியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மறைத்து வைத்திருந்ததாக சொல்லப்பட்ட பொருட்கள் எங்கு இருந்தது என்றால் ஒரு அறையில் உள்ள அலமாரியில் இருந்தது. அந்த வீட்டில் அறைகளே கிடையாது அது அரசால் இலவசமாக கட்டிக்கொடுக்கப்பட்ட சாதாரண தொகுப்பு வீடு என்றால் தொகுப்பு என்பது எனக்கு தெரியாது.

6. நான் அங்கு செல்லவேயில்லை என்பதால் எனக்கு அது பற்றி தெரியாது என்றால் சரியல்ல. இருசக்கரவாகனத்தை எங்கு மறைத்திருந்தார் என்றால் வீட்டின் பின்பகுதியில் 2 பெரிய இருசக்கரவாகனங்களை துணியை வைத்து மறைத்து வைத்திருந்தார். ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காகவும், கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்வதற்காகவும் காவல் ஆய்வாளர் எனக்கு சம்மன் ஏதும் அனுப்பினாரா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலர் மார்சல் பணிபுரியும் சோமநாதமங்களம் கிராமம் என்றால் சரிதான்.

7. சோமநாதமங்களம் கிராம நிர்வாக அலுவலர்தான் காளையார்கோவில் கிராமத்திற்கும் கிராம நிர்வாக அலுவலகர் என்றால்சரிதான். காளையார்கோவிலில் இருந்து கண்ணங்கோட்டை கிராமம் எத்தனை கிலோமீட்டர் இருக்கும் என்றால் சுமார் 30 கி.மீ தூரம் இருக்கும். 30 கி.மீ சென்றதற்கான எனது வாகனத்திற்கான லாக்புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. கண்ணங்கோட்டை கிராமத்திற்கு சென்றிருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறு செல்லாததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையம்

சென்றபோது 1வது எதிரி தினேஸ்குமாரை கைது செய்து வைத்திருந்தார்களா என்றால் கைது செய்து தான் வைத்திருந்தார்கள். எப்போது கைது செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியப்படுத்தவில்லை, நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

9. LED டிவி - 1, Sony LED டிவி -1, வாசிங் மிசின், ஏசி (அரை டன்) ஆகியவற்றை 1வது எதிரி திருடிக்கொண்டு வந்ததாக அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னரா என்றால் ஆமாம். மேற்படி பொருட்களை எங்கிருந்து திருடப்பட்டது என்பதையும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரி சொன்னாரா என்றால் ஆமாம். 1வது எதிரி நான் சொல்வது போல் என்முன்பும் கிராம நிர்வாக அலுவலர் மார்சல் என்பவர் முன்பும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் ஆய்வாளர் தயார்செய்த பொய்யான ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துஅதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. என் முன்பாக எந்த பொருட்களும் மகஜரின் பேரில் கைப்பற்றபட வில்லை என்றாலும் ஆய்வாளரால் பொய்யாக தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

**1.** காளையார் கோவில் காவல் நிலையத்தில் சிசிடிவி கேமரா எல்லா அறைகளிலும் மற்றும் காவல்நிலையத்தை சுற்றிலும் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யும் போது அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சிசிடிவி கேமரா தவிர வேறு கேமராவில் போலிசார் பதிவு செய்தார்களா என்றால் ஞாபகமில்லை.

2. ஒப்புதல் வாக்குமூலத்தை தனிப்பட்ட கேமராவில் பதிவு செய்ய கோரிக்கை வைத்தேனா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு

செய்வதற்கு எனக்கு வேண்டுகோள் கடிதம் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்தால் ஒப்புதல் வாக்குமூலம் எவ்வாறு பெறப்பட்டது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான்.

3.நான் முறைப்படி காவல்நிலையம் சென்று ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்தற்கு இணங்க போலிசார் தயார் செய்த ஆவணங்களில் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

**1.** 3 வது எதிரி குமார் என்பவரை போலிசார் எத்தனை மணிக்கு கைது செய்து காவல்நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு முன்பு 3 வது எதிரி குமார் என்பவரை போலிசார் அச்சுறுத்தினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும் போது குற்றக் கையேடு தயார் செய்வதற்காக எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை தாசில்தார் என்ற முறையில் நான் கைப்பட எழுதவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான்.

2. 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கிராம நிர்வாக அலுவலர் கையொப்பத்தின் கீழாக தேதி தவறுதலாக உள்ளது என்றால் சரியல்ல. 27.02.2024 அன்று 1ம் எதிரி காவல்நிலையத்தில் இருந்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. 26.02.2024 க்கு அதற்கு முதல் நாள் மாலை 06.00 மணிக்கு என்முன்னிலையில் ஒரு இரும்பு கடப்பாறை 1வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக நான் சொல்லியுள்ளதில் அந்த கடப்பாறையின் நீளம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

3. 1வது எதிரியிடம் இருந்து எந்த விதமான தங்க நகைகளை கைப்பற்றினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது எதிரியை போலிசார் துப்பாக்கியால் சுட்டது பற்றி எனக்கு தெரியுமா என்றால் நான் தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்துகொண்டேன். எந்த தேதியில் தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்துகொண்டேன்என்றால் 26.02.2024 அன்று இரவு தெரிந்துகொண்டேன்.

4. 26.02.2024 அன்று மாலை 06.00 மணிக்கு 1வது எதிரி போலிசாரால் சுடப்பட்டார் என்றால் அதை தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்துகொண்டேன். நான் சொல்வது போல் போலிசார் விசாரணைக்காக நானும் கிராம நிர்வாக அலுவலரும் போலிசாருடன் செல்லவில்லை என்றும் சான்றுபொருட்கள் எதுவும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் கண்ணங்கோட்டையில் 1வது எதிரி மாமனார் வீடு இல்லை என்றால் சரியல்ல.

5.காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. போலிசார் 1 வது எதிரி மீது துப்பாக்கி சூடு நடத்தியதால் என்னை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் சாட்சியாக உள்ளோம் என்றால் சரியல்ல. 3 வது எதிரி எங்கள் முன்னிலையில் எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.09.16 05:33:29 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**

**சிவகங்கை..**